**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 257/2025**

**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. அப்துல்லா** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. நஜூமுதீன்** | **Calling** | : | |
| **Village** | : | **கவடக்காரத்தெரு** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | |
| | | | **Dated** | : | **19.05.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1-ம் எதிரி ஆஜர். 3-ம் எதிரி இறந்துவிட்டார். 2-ம் எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் திண்டுக்கல் நகர், கவடக்காரத்தெருவில் வசித்து வருகிறேன். ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வருகிறேன். புகார்தாரர் நிர்மலா ராணியைத் தெரியும். அவர் எனக்கு பழக்கமானவர்தான். ஆஜர் 1-ம் எதிரியைத் தெரியாது. எதிரிகள் வில்லியம்ஸ் மற்றும் தீபு என்ற தீபக் ஆகியோரையும் தெரியாது. சுமார் 15 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் கவடக்காரர்தெருவிற்கு அருகே உள்ள காளியம்மன் கோவில் பக்கத்தில் நான் இயற்கை உபாதை கழிப்பதற்காக சென்றுவிட்டு வந்தபோது, மாலை 04.30 மணியளவில் எழில்மாறன் என்பவர் அடிபட்டு கிடந்தார். அவருக்கு உடல் முழுவதும் காயமாகி இருந்தது. அவரை ஒரு போக்கு ஆட்டோவில் ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சையில் சேர்த்தேன். பின்னர் தகவல் தெரிந்து போலீசார் வந்ததும்

என்னிடம் ஒரு கையொப்பம் வாங்கிக் கொண்டு அனுப்பி வைத்து விட்டார்கள். அதன்பின்னர் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. மேற்படி எழில்மாறன் காயம்பட்டு சுயநினைவின்றி இருந்தார். அதனால் அவருக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று அறிந்து கொள்ள முடியவில்லை.

**(அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

கடந்த 07.02.2011ம் தேதி மாலை 04.30 மணிக்கு நானும், எழில்மாறன், ரமேஷ் ஆகியோர் திண்டுக்கல் RS ரோட்டில் அருகே உள்ள நாட்டுக்கோழி கறிக்கடைக்கு அருகே உள்ள கழிப்பறைக்கு சென்றபோது, அப்போது எதிரிகள் செல்வம், வில்லியம் மற்றும் பெயர் தெரியாத அடையாளம் தெரிந்த நபரும் அங்கு வந்தார்கள் என்றும், அவர்கள் எழில்மாறனை வழிமறித்து தடுத்து நிறுத்தி மது அருந்துவதற்காக பணம் கேட்டு மிரட்டினார்கள் என்றும் அப்போது எழில்மாறம் பணம் தர மறுத்தால் எதிரி செல்வம் என்பவர் தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து எழில்மாறனின் இடது கழுத்தில் அறுத்துவிட்டார் என்றும், வில்லியம் தன் கையில் வைத்திருந்த கத்தியால் எழில்மாறனின் வலது கன்னத்தில் கீறி இரத்தக்காயம் ஏற்படுத்திவிட்டார் என்றும், அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத மற்றொரு நபர் அவர் கையில் வைத்திருந்த கத்தியால் எழில்மாறனை நெற்றியில் வெட்டி காயம் ஏற்படுத்தினார் என்றும், நானும், ரமேஷ்ம் தடுத்தபோது எழில்மாறனை கத்தியைக்காட்டி மிரட்டிவிட்டு எதிரிகள் அங்கிருந்து சென்று விட்டார்கள் என்றும், நான்

எழில்மாறனின் அம்மா நிர்மலாராணிக்கு தகவல் சொன்னேன் என்றும், நானும், ரமேஷும் காயம் பட்ட எழில்மாறனை திண்டுக்கல் அரசு மருத்தவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சையில் சேர்த்தோம் என்றும், நடந்த சம்பவத்தை நான் நேரடியாக பார்த்ததாக போலீசார் விசாரித்தபோது கூறிவிட்டு, தற்போது அதை மறைத்து எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–** இல்லை.

Taken down by me/before me in open court on 19.05.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.05.19 17:45:21 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 257/2025**

**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. கஸ்பார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பிளவேந்திரன்** | **Calling** | : | |
| **Village** | : | **முள்ளிப்பாடி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | |
| | | | **Dated** | : | **19.05.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1–ம் எதிரி ஆஜர். 3–ம் எதிரி இறந்துவிட்டார். 2–ம் எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் திண்டுக்கல் மாவட்டம், முள்ளிப்பாடியில் வசித்து வருகிறேன். பெஸ்கி இல்லத்தில் வேலை பார்த்து வருகிறேன். புகார்தாரர் நிர்மலா ராணி மற்றும் காயம்பட்ட எழிமாறன் ஆகியோரைத் தெரியாது. ஆஜர் 1–ம் எதிரியைத் தெரியாது. எதிரிகள் வில்லியம்ஸ் மற்றும் தீபு என்ற தீபக் ஆகியோரையும் தெரியாது. சுமார் 16 ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு நாள் காலை 10.15 மணியளவில் மெங்கில்ஸ் ரோட்டில் தலப்பாக்கட்டி உணவகம் அருகே உள்ள கோழிக்கடையில் நான் கறி வெட்டிக் கொண்டு இருந்தபோது ஒரு போலீசார் வந்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். அந்த இடத்தில் ஏதோ பிரச்சனை நடந்ததாகவும், அதற்காக கையொப்பம் வாங்குவதாகவும் கூறினார்கள். என்ன பிரச்சனை என்று எனக்குத் தெரியாது. என்னிடம் காட்டப்படும்

ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது இல்லை. **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

கடந்த 08.02.2011ம் தேதி பகல் 11.00 மணிக்கு நானும், மரியலூயிஸ் என்பவரும் தோமையார்புரம் பேருந்து நிறுத்தம் அருகே சென்றபோது தாலுகா போலீசார் அங்கு நின்று கொண்டுஇருந்தார்கள் என்றும், அங்கு தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்த செல்வம் என்ற செல்வராஜ் மற்றும் வில்லியம்ஸ் ஆகியோர்களை சாட்சிகளான எங்கள் முன்னிலையில் பிடித்து விசாரணை செய்தார்கள் என்றும், அவர்களில் செல்வம் என்பவர் சாட்சிகளான எங்கள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், வில்லியம்ஸ்ம் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகள் இருவரும் பகல் 11.55 மணிக்கு திண்டுக்கல், மேட்டுப்பட்டி, குட்டைக்குளம், பாத்திமா மருத்துவமனை பின்புறம் எங்களை அழைத்துச் சென்று அங்கு மறைத்து வைத்திருந்த இரண்டு கத்திகளை எடுத்து ஆஜர் செய்தார்கள் என்றும், அதனை காவல் ஆய்வாளர் கைப்பற்றிக் கொண்டு, அவர்கள் தயார் செய்த அத்தாட்சியில்

என்னிடமும், வில்லியம்ஸிடமும் சாட்சிகளாக கையொப்பம் வாங்கிக் கொண்டார்கள் என்றும், இது சம்மந்தமாக போலீசார் எங்களை விசாரித்தார்கள் என்றும் கூறிவிட்டு தற்போது அதை மறைத்து எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>** இல்லை.

**Taken down by me/before me in open court on 19.05.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.05.19 17:45:28 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**